**<u>Deposition of witness</u>**

**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR</u>**

| | | |
|---|---|---|
| O.S.No. | : | 254/2009 |
| Deposition of Witness for | : | CW1 |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | திரு.திருப்பதி (நீதிமன்ற ஆணையர்) |
| Father’s name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 9th Day of April 2026.

O.S.No.254/2009 வழக்கு சம்மந்தமாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் CRP(MD) No.729/2026 என்ற எண்ணின் 18.03.2026 தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகல் 13ம் பிரதிவாதி தரப்பில் 08.04.2026 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்தரவின்படி வழக்கறிஞர் ஆணையருக்கு ரூ.10000/- 27.03.2026ஆம் தேதியே கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் இருப்பினும் உத்தரவின் நகல் 07.04.2026 ஆம் தேதிதான் e-court-ல் upload செய்யப்பட்டது என்றும் எனவே வழக்கறிஞர் ஆணையரை இன்றைய தினம் விசாரிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலும்

வாதி தரப்பு வழக்கறிஞர் இன்றைய தினம் வழக்கறிஞர் ஆணையரை விசாரிக்க ஆட்சேபனை இல்லை என தெரிவித்தன் அடிப்படையிலும் நீதியின் நலன் கருதியும் வழக்கறிஞர் ஆணையர் இன்றையதினம் (09.04.2026) விசாரிக்கப்படுகிறார்.

**<u>13ம் பிரதிவாதி தரப்பில் ஆணையர் அறிக்கையை குறித்து குறுக்கு விசாரணை</u>**

1) நீ.ம.சா.ஆ.1 உடன் பிராது நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தை அதில் உள்ளப்படி எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மாறுதல் உள்ளது. எனது அறிக்கையில் 1 வது இலக்க சொத்து, 2 வது இலக்க சொத்து, 3வது இலக்க சொத்து, 4 வது இலக்க சொத்து, 5 வது இலக்க சொத்து ஆகியவை எந்த அடிப்படையில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு வழங்கப்பட்ட வாரண்ட் மற்றும் ஸ்தல ஆய்வின் போது கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் தெரிவித்த தகவலின்படி குறிப்பிட்டுள்ளேன்.

2) பிராதில் சொல்லியுள்ள சொத்து விவரத்தை தவிர வேறு விவரங்களை சொத்து விவரத்தில் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது சம்மந்தமாக குறிப்பாக அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது அறிக்கையில் நான் தாவா சொத்தை பார்வையிட்ட சமயத்தில் பிராதில் கண்டுள்ள சர்வே எண்ணிற்கும் ஸ்தல ஆய்வின்போது இருந்த சர்வே எண்கள் சம்மந்தமாக ஒப்பிட்டு ஆவணங்கள் அல்லது சான்றிதழ்கள் பெற்று சரிப்பார்த்தாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. ஆனால் வாரண்டில் உள்ள சர்வே எண்களைதான்

வருவாய் துறையினர் அளந்து அத்துமால் செய்தனர். இரண்டும் ஒரே சர்வே எண்ணில் கட்டுப்பட்டதால் நான் அறிக்கையில் குறிப்பிடவில்லை.

3) பிராது சொத்துவிவரங்களில் அனைத்து சொத்துகளிலும் பழைய ரீசர்வே எண்.158ல் கட்டுப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். நான் ஸ்தலத்தை பார்வையிட்டபோது பழைய ரீசர்வே எண்.158ற்கு புதிய சர்வே எண் என்ன என்று ஆவணங்களை பார்வையிட்டதாக எனது அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் புதிய சர்வே எண் என்று இல்லை வாரண்டில் புதிய சர்வே எண் என்று குறிப்பிடப்பட்டதுதான் ஸ்தலத்தில் இருந்தது அந்த இடத்தைதான் வருவாய் துறையினர் அடையாளம் காண்பித்தனர். எனவே நான் தனியாக ஆவணம் எதுவும் பார்வையிடவில்லை.

4) பிராதில் கண்டுள்ள சர்வே எண்கள் உண்மையானதா அதில்தான் தாவா சொத்துக்கள் உள்ளதா என்று தனிப்பட்ட முறையில் நீதிமன்ற ஆணையராகிய நான் தீர்மானிக்கவேண்டுமென்றாலும் அவ்வாறு செய்யாததால் இந்த அறிக்கை தவறானது என்றால் சரியல்ல. பழைய ரீசர்வே எண்ணிற்கும் புதிய ரீசர்வே எண்ணிற்கும் ஒப்பீடு செய்து அதில் தான் தாவா சொத்துக்கள் உள்ளது என்று நான் அறுதியிட்டு சொல்லாததால் எனது அறிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடிதல்ல என்றால் சரியல்ல.

5) நீ.ம.சா. ஆ.3 ஆவணத்தில் பழைய ரீசர்வே எண்.158ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் புதிய ரீசர்வே 17ல் கட்டுப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய ரீசர்வே எண்.157ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் புதிய ரீசர்வே 16ல் கட்டுப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் நான் பார்வையிட்டு

இருந்தால் புதிய ரீசர்வே எண்.17க்கு மட்டும்தான் நான் அறிக்கையை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் ரீசர்வே எண்.158ல் கட்டுப்பட்ட சொத்தினை புதிய ரீசர்வே எண்.16ல் அடையாளம் காண்பித்திருக்க மாட்டேன் என்றாலும் வருவாய் துறை ஆவணங்களில் உள்ள விவரங்களை மட்டுமே நான் குறிப்பிட்டுள்ளேன்.

6) நீ.ம.சா.ஆ.3 ஆவணம் வருவாய் துறையினரால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் ஆவணத்தின் நகல் என்றால் ஆமாம்.

7) நீ.ம.சா.ஆ.2 ஆணையர் அறிக்கையில் இந்த வழக்கில் தரப்பினராக இல்லாத, வாரண்டில் குறிப்பிடப்பட்டதா ரீசர்வே எண்.17/9 என்ற நிலம் தேவி குமாரி என்பரின் பெயரில் இருப்பதாக வாதிகள் கேட்டுக் கொண்டதன்பேரில் நான் தெரிவித்துள்ளேன் என்றால் தவறு. அது 3ம் இலக்க சொத்திற்கு மேற்கு மாலாக இருந்ததால் குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆவணத்திற்கு வேறுப்பட்டு காணப்படுகிறது என்றால் தவறு. வரைபடத்தில் தேவிகுமாரி என்று காண்பிக்கப்பட்டுள்ளது போல் வேறு நபர்களிடம் காண்பிக்கப்படவில்லை என்றால் தவறு. அமரன் வகையறா, EMG சௌந்தரராஜன் ஆகியோர் இடங்களை காண்பித்துள்ளேன்.

8) நான் ஸ்தல பார்வையிட்டபோது 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் வேறு ஒருநாளைக்கு ஒத்திவைக்க குறிப்பாணை கொடுத்தார்கள் என்றால் ஆமாம். ஏன் வேறு ஒரு நாளைக்கு ஒத்திவைக்கவில்லை என்பதற்கான காரணங்களை குறிப்பிடவில்லை என்றால் வருவாய் துறையினர் மற்றும் மற்ற தரப்பினர் ஆஜராகி இருந்ததால் வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கவில்லை.

9) நான் பிராது சொத்து விவரங்களையும், வாதிகளின் பெயரில் உள்ள ஆவணங்களின் சொத்து விவரத்தையும் சரிப்பார்த்து சரியான சொத்தினை என்னுடைய அறிக்கையிலும் வரைப்படத்திலும் அடையாளம் காட்டவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க புதிய ரீசர்வே எண்.16ல் கட்டுப்பட்ட சொத்தினையும் பிராது சொத்துக்களாக தவறாக அடையாளம் காட்டி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) மதுரை to நத்தம் சாலையில் இருந்து வாதிகள் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்திற்கு அனுகூலமாக புதிய ரீசர்வே எண்.16ல் கட்டுப்பட்டுள்ள சொத்தும் பிராது சொத்துக்களாக நான் அறிக்கையிலும் வரைபடத்திலும் அடையாளம் காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரைக்கு ஒத்திருப்பதால் எனது அறிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.